**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8035246

1. District மாவட்டம் : The Nilgiris PS: காவல்நிலையம் V & AC. Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 1/15/AC/4 Date/ நாள் 23.04.18

2. (i) Act சட்டம்: 7 of PC Act 1988. Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 19.04.18 Date to : நாள் வரை 19.04.18

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.30 hrs Time to : நேரம் வரை Evening.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.04.18 Time : நேரம் 13.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 1 km - West.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Joint - II Sub. Registrar Office Near Taluk office. Ooty

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Ravikumar. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Late Raman.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Advocate. (g) Address : முகவரி 83. Churchill Lane, Ooty

O/C

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Ramesh, Joint - II Sub Registrar, Udhagamandalam, The Nilgiris.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — Preliminary Enquiry —

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 23/4/18
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. GEETHALAKSHMI
Rank: நிலை ......................No. எண் ..........
INSPECTOR OF POLICE
V&AC, THE NILGIRIS.

நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2018/AC/NI வழக்கின் இணைப்பு.

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் முன்பாக சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 19.04.2018 ஆம் தேதி பகல் 13.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், சர்ச்ஹில், கதவு எண்.83 என்ற முகவரியை சேர்ந்த வழக்குறைஞர் திரு.R.ரவிக்குமார் என்பவர் ஆஜராகி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மூன்று பக்க புகார் மனுவினை கொடுத்தார். அந்த புகாரில், தான் உதகையில் குடியிருந்துக்கொண்டு கடந்த 20 வருடங்களாக வழக்குறைஞராக தொழில் செய்து வருவதாகவும், நீலகிரி மாவட்டம், எடக்காடு நடுஹட்டி கிராமம், கதவு எண்.1/321F என்ற முகவரியை சேர்ந்த திரு.K.N.ராஜு என்பவரது மகன் திரு.R.சிவக்குமார் என்பவர் தன்னை அணுகி எடக்காடு கிராமம், பாதகண்டியில் கதவு எண்1/70M1 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு.R.முத்துசாமி என்பவரது பெயரில் ஒரு விற்பனை பத்திரத்தை பதிவு செய்து தருமாறு கேட்டதாகவும், மேலும், திரு.R.சிவக்குமார் என்பவர் தனக்கு சொந்தமாக இருந்த குந்தா தாலுக்கா, பிக்கட்டி கிராமம் சர்வே எண்.150–ல் 60 செண்ட் தேயிலை தோட்டத்தை திரு.R.முத்துசாமி என்பவருக்கு விற்றுள்ளார். திரு.R.முத்துசாமி என்பவர் படிக்காதவராததால் திரு.R.சிவக்குமார் அவர்கள் நில அளவையர் உதவியுடன், தான் விற்பனை செய்யும் தேயிலை தோட்டத்தினை வரைபடம் தயார் செய்து வருவாய் அலுவலக ஆவணங்களுடன் தன்னை அணுகி பத்திரத்தை பதிவு செய்து தருமாறு கேட்டதாகவும், அதற்காக வாதி உதகமண்டலம் இணை சார் பதிவாளர் II, திரு.ரமேஷ் என்பவரை அணுகிய போது, அவர் ஆன்லைனில் ஒப்புதல் அளித்து பதிவு செய்ய 7,000/– ரூபாய் லஞ்சமாக கேட்டதாக கொடுத்த புகாரைப் பெற்று, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனர் அவர்களுக்கு அனுப்பி, அதன்பேரில் இயக்குனரக நமூனா எண்,PE112/2018/REGN/NI, நாள்.19.04.2018–ல் கண்ட உத்தரவுப்படி முதல் கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக எதிரி லஞ்சமாக பணம் கேட்டதை உறுதிப்படுத்தும் பொருட்டு 19.04.2018 அன்று 14.45 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு முதல் நிலை காவலர்–953/நீ திரு.H.R.பீம்சிங் என்பவரை புகார்தாரருடன் அனுப்பி உதகமண்டலம் இணை சார் பதிவாளர் II அவர்களின் அலுவலகத்தில் பணிபுரியும் இணை சார் பதிவாளர் II அவர்களை சந்தித்து அவர்கள் உரையாடலின் குரல் பதிவை பதிவு செய்ய அனுப்பினேன். அந்த உரையாடலின் ஒரு பகுதியில் புகார்தாரர் எதிரியிடம் OK பண்ணிட்டீங்களா எனக்கேட்டதாகவும், அதற்கு இல்லையென்று சொல்லி, டாக்குமெண்ட் 2

அனுப்பிட்டீங்களா எனக்கேட்டதாகவும், தானும் அனுப்பிவிட்டதாக சொல்ல, எதிரி சைகையில் ரூ.7,000/- லஞ்சமாக கேட்டதாகவும், அதற்கு வாதி கொஞ்சம் குறைக்கக்கூடாதா என்று சொல்லி சைகையில் ரூ.5,000/- என்று காண்பித்ததாகவும், அதற்கு எதிரி ரூ.1,000/- சேர்த்து வாங்கி கொடுங்க என சொன்னதாகவும் அதன்பிறகு சரி என்றுவிட்டு, கிளிக் செய்து விடுவதாகவும் பத்திரத்தை பதிவு செய்யும் நாளன்று லஞ்சப்பணமான 6,000/- ரூபாயை தன்னிடம் கொடுக்குமாறு சொன்னதாக வாதி தெரிவித்தார். புகார்தாரர் திரு.R.ரவிக்குமார் அவர்களை விசாரித்து, மேற்படி புகாரின் உண்மை தன்மையை பதிவுப்பட்ட உரையாடல் மூலமும், இரகசிய விசாரணையின் மூலமும் ஊர்ஜிதம் செய்ததில், மேற்படி எதிரியான உதகமண்டலம் இணை சார் பதிவாளர் II அவர்கள் தன்னுடைய பணிக்கு தகாத வகையில் அனைவரிடமும் லஞ்சமாக பணம் பெற்றுக்கொண்டு பணிபுரிந்து வருகிறார் என்று தெரியவருகிறது. மேலும் இன்று 23.04.2018 காலை 08.00 மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு திரு.R.ரவிக்குமார் அவர்கள், தான் 19.04.2018 ஆம் தேதி கொடுத்த புகாரின் பேரில் எதிரியை பொறி வைத்து பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ள தனது முழு ஒத்துழைப்பையும் நல்குவதாக கூறி 6,000/- ரூபாயுடன் வந்து ஆஜரானார். எனவே என்னுடைய முதற்கட்ட விசாரணையில் ஊழல் தடுப்பு சட்டப் பிரிவு 7-ன் கீழ் வழக்கு பதிவு செய்வதற்கு முகாந்திரம் இருப்பதாக கருதி, முதற்கட்ட விசாரணையை இன்று முடித்துக்கொண்டு என்னுடைய உயர் அதிகாரியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உத்தரவு பெற்று இவ்வழக்கை இன்று 23.04.2018 காலை 08.15 மணிக்கு பதிவு செய்கிறேன். திரு.R.ரவிக்குமார் அவர்கள் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு:

"Ootacamund, 19th April 2018, From R.Ravikumar, S/o.Late N.Raman, Advocate, 83, Churchhill Lane, Ooty-643001, To The Inspector of Police, Vigilance and Anticorruption, Ootacamund, Madam, I am residing in the above address and a practicing Advocate for more than 20 years in Nilgiris and my Roll No. is M.S.519 of 1996. One R.Sivakumar, S/o.Late K.N.Raju residing at 1/321F of Naduhatty Village, Yedakadu Post, The Nilgiris had approached me to register a sale Deed in favour of one R.Muthusamy residing at 1/70M1, Pathakandi, Yedakadu Village and Post. As the above R.Sivakumar had sold his tea garden extending 60 cents in New survey No.150 of Bikkatty Village of Kundha Taluk. Since the purchaser is an illiterate, the seller R.Sivakumar had prepared the sketch with a help of a Surveyor and produced revenue records and approached me to register the sale Deed. On 17-4-2018 for the purpose of Registration, I applied online satisfying all the conditions required for registration and obtained TP/9262938/2018 on the same day. On 18-4-2018 the Sub

Registrar of Assurances Joint II of Ootacamund Thiru.Ramesh instead of giving O.K click in the Registrar office computer system he had rejected the TP/9262938/2018 without assigning any valid reasons. Today (19-4-2018) at 12.00 P.M. the seller R.Sivakumar came to me and insisted me to do the Registration on 20-4-2018 as such I along with the R.Sivakumar went to the Sub-Registrar office at 12.30 P.M. and enquired about the reason for the rejection wherein the Sub-Registrar did not give valid reasons for rejections on the other hand the Sub-Registrar demanded Rs.7,000/- (Rupees seven thousand only) as bribe to click okay for the TP/9262938/2018 and to Register the same. As the seller R.Sivakumar and myself are not willing to pay the bribe we decided to lodge a complaint. Hence I humbly submit to your good-self to enquire into the matter and take appropriate legal action against the Joint Sub-Registrar II of Ootacamund, the Nilgiris for demanding the bribe of Rs.7,000/- (Rupees seven thousand only) to register the sale Deed. Yours faithfully Sd/- (R.RAVIKUMAR, ADVOCATE) 19-4-2018. Submitted:- On receipt of a report dated 19.04.2018 at 13.00 hrs from Tr.R.Ravikumar, I forwarded a copy of the same to DVAC for orders. As per the orders of DVAC vide Memo No.PE112/2018/REGN/NI, Dated.19.04.2018, a Preliminary Enquiry was conducted and allegations found to be genuine. After getting concurrence from the DVAC, a case in the Nilgiris V&AC Cr.No.1/2018/AC/NI, u/s 7 of PC Act of 1988 is registered on 23.04.2018 at 08.15 hrs and took up investigation. Sd/- (B.GEETHALAKSHMI) 23.04.2018, Inspector of Police, V&AC, The Nilgiris District. The FIR along with complaint dated.19.04.2018 of Tr.R.Ravikumar, a CD containing audio conversation between Tr.R.Ravikumar and Tr.Ramesh with a certificate under section 65 B of Indian Evidence Act is sent to the Hon'ble Special Court, Udhagamandalam. The copies of the FIR is submitted to the officers concerned.

B.Geethalakshmi 23/4/18

(B.கீதாலட்சுமி)

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.